# இயேசு ஊழியங்கள்

105/229, எம்.டி.எச் ரோடு, வில்லிவாக்கம், சென்னை – 600 049
போன்: 9003009752
ஈமெயில்: beten.yatsar@angeltv.org இணையதளம்: www.jesusministries.org

பிரியமுள்ள என் அன்பு மகளே,

அதிசீக்கிரமாக வரபோகும் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தேவனுடைய சமாதானத்தையும் என் அன்பின் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேதத்தில் ஆண்டவராகிய கர்த்தர் உங்கள் கருவில் இருக்கும் உங்கள் குழந்தையை நோக்கி சொல்லும் வார்த்தையை சற்று கவனத்தோடு வாசித்துப்பாருங்கள்.

> உன்னை உண்டாக்கினவரும், தாயின் கர்ப்பத்தில் உன்னை உருவாக்கினவரும், உனக்குத் துணைசெய்கிறவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது; என் தாசனாகிய என் யாக்கோபே, நான் தெரிந்துகொண்ட யெஷூரனே,பயப்படாதே (***ஏசாயா:***44:2)

உங்கள் குழந்தையை அவர்தான் உண்டாக்கினார். அவர்தான் இது வரைக்கும் உங்கள் குழந்தைக்கு துணைசெய்கிறார். இதை நீங்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இன்றைக்கு பலவித பயத்தோடும் கலக்கத்தோடும் இருக்கும் நீங்கள் இந்த வார்த்தையை விசுவாசிக்கவேண்டும்.நீங்கள் தைரியமாக இருக்கவேண்டும். உங்கள் குழந்தைக்கும் உங்களுக்கும் ஆண்டவரைமீறி எதுவும் நடந்துவிடப்போவது இல்லை. நல்ல சுகத்தொடு, ஏற்றகாலத்தில் சுகப்பிரசவத்தில் உங்கள் குழந்தையை நீங்கள் பெற்று எடுப்பீர்கள். உங்கள் குழந்தை பூரண வளர்ச்சியோடு பிறக்கும் ஏனென்றால் கர்த்தர் உங்கள் குழந்தைக்கு துணை செய்கிறார். இனிமேல் தேவையில்லாத பயத்துக்கு இடம் கொடுக்காதீர்கள். அது சாத்தானின் ஒரு தந்திரம். இப்போதும் நான் உங்களின் பாதுகாப்புக்காகவும் உங்கள் கருவில் இருக்கும் குழந்தையின் பாதுகாப்புக்காகவும் ஜெபிக்கப்போகிறேன். என்னோடு இணைந்துகொள்ளுங்கள். உங்கள் வலது கையை உங்கள் வயிற்றின்மீது வைத்துக்கொள்ளுங்கள்.

மகா பரிசுத்தமுள்ள எங்கள் அன்பின் பிதாவே, எங்களை உண்டாக்கினவரே, இதோ உம்முடைய கரம் இப்போது எனது அன்பு மகளின் கரங்கள் வழியாக இவர்கள் வயிற்றில் இருக்கும் குழந்தையை தொடுவதாக. உம்முடைய பாதுகாக்கும் வல்லமை இப்போழுதே குழந்தையை நிரப்பட்டும். எல்லா பயமும் விலகி ஓடட்டும். உம்முடைய பலத்த கரம் இவர்கள் இருவரையும் மூடிப்பாதுகாத்துக்கொள்ளட்டும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் எங்கள் பரிசுத்தமுள்ள நல்ல பிதாவே ஆமென்.

என் அன்பு மகளே, ஏசாயா 44:2ம் வசனத்தை உங்கள் குழந்தையின் காதில் விழும்படியாக அடிக்கடி சத்தமாக வாசியுங்கள். அப்பொழுது கர்த்தருடைய அபிஷேகம் உங்கள் குழந்தையை நிரப்பும். கர்த்தர் நிச்சயமாக உங்களையும் உங்கள் கர்ப்பத்தின் கனியையும் ஆசீர்வதிப்பாராக. பயப்படாமலும் கவலைப்படாமலும் மனமகிழ்ச்சியாக இருங்கள்.

மேலும் ஜெப உதவிக்கு எங்களோடு தொடர்புகொள்ளுங்கள் : 9003009752

அன்புடன்

S. Selvaraj

சாது சுந்தர் செல்வராஜ்

*குறிப்பு : உங்கள் ஏஞ்சல் டிவி-யில் பெட்டன் யாட்சார் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன் கிழமை மதியம் 3 மணிக்கும், அதன் மறுஒளிபரப்பு ஞாயிற்றுக் கிழமை மாலை 5:30 மணிக்கும் ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்.*